பக்கங்கள் 17+5

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 09 ஞாயிற்றுக்கிழமை 25.08.2024 | அதிர்வு 24

## மின்சாரம் தாக்கி மாணவன் சாவு!

மின்சாரம் தாக்கிப் பாடசாலை மாணவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம், கலென் பிந்துனுவெவ பகுதியில்

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்







### ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு?

# தமிழரசுக் கட்சி முடிவெடுக்கும் வரை மக்கள் பொறுமை காக்க வேண்டும்!




## சுமந்திரன் எம்.பி. கோரிக்கை

(ஏ.எச்.ஹஸ்பர்)

“ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது பற்றி இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை. எனவே, தமிழரசுக் கட்சி முடிவெடுக்கும் வரை பொறுமை காக்க வேண்டும் என்று எமது மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று மாலை நாடாளுமன்ற உறுப்பினர்சண்முகம்குகதாசனைவரவேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

04

# மன்னார் சிந்துஜாவின் கணவர் சுதன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அண்மையில் உயிரிழந்த இளம் தாய் சிந்துஜாவின் கணவர் எஸ்.சுதன் (26 வயது) அவரது சொந்த ஊரான வவுனியா, பணிக்கர் – புளியங்குளத்தில் நேற்று இரவு தவறான முடிவெடுத்து மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த மாதம் இளம் தாய் ஒருவர் குழந்தை பெற்ற நிலையில் சில நாட்களின் பின்னர் இரத்தப்போக்கு காரணமாக மீண்டும் அந்த வைத்தியசாலைக்குச் சென்றபோது அங்கு வைத்தியசாலை ஊழியர்களால் கவனிக்கப்படாத நிலையில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டு பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், அவருடைய கணவர் தனது சொந்த ஊரான வவுனியா, பணிக்கர் – புளியங்குளத்தில் வசித்து வந்திருந்தார்.

04





# பண்டாரவன்னியனின் நினைவேந்தல் நிகழ்வு

(கே.வசந்தன்)

தேசிய வீரன் மாவீரன் பண்டாரவன்னியனின் 221 ஆவது நினைவு நாள் வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள பண்டாரவன்னியன் சதுக்கத்தில் இன்று நடைபெற்றது.

இதன்போது பண்டாரவன்னியனின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டதுடன், அவர் தொடர்பான சிறப்புரைகளும் இடம்பெற்றன.

வவுனியா நகர சபை செயலாளர் அ.பாலகிருபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டதுடன் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெ.ரதீஸ்வரன் மற்றும் பொது அமைப்புக்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.























# ஹிருணிக்கா தலைமையில் பதுளையில் பெண்கள் சந்திப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பதுளை மாவட்டத்திலுள்ள, ஊவா பரணகமவில் ஹிருணிக்கா பிரேமசந்திரன் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் பெண்கள் சந்திப்பு இடம் பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜீத் பிரேமதாஸவை ஆதரித்து பெண்களுக்கான தேர்தல் பிரச்சார கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் அதிகள எண்ணிக்கையான பெண்கள் கலந்து கொண்டனர்.





# இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கன்னி தேர்தல் பிரச்சாரம் எதிர்வரும் 30!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ்)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கன்னி தேர்தல் பிரச்சாரம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் 9 ஆவது ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டுத் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கக் கடந்த 18 ஆம் திகதி இ.தொ.காவின் தேசிய சபை ஒன்றுகூடி ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்க்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை, கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் கைச் சாத்திடபடவுள்ளது. மேலும் 2024 ஜனாதிபதி தேர்தலின், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கன்னி தேர்தல் பிரச்சார நடவடிக்கைள் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கபடவுள்ளது.

எமது நாட்டின் இக்கட்டான பொருளாதார நெருக்கடியில் நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதியை அதிகப்படியான வாக்குகள் மூலம் மீண்டும் வெற்றிபெறச் செய்வோம். நாங்கள் அனைவரும் ஓரணியாக திகழ்வோம்.- என்றார்.









# பாலத்தில் மோட்டார் சைக்கிளுடன் தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் மரணம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் பாலத்தில் இருந்து மோட்டார் சைக்கிளுடன் தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பழுகாமம் – பெரியபோரதீவு பிரதான வீதியில் உள்ள ஆத்துக்கட்டு பாலத்தின் ஊடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த 3 பேர் பாலத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்த முற்பட்ட நிலையில் அதனைச் செலுத்தியவரே மோட்டார் சைக்கிளுடன் பாலத்தில் இருந்து கீழே தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று ஞாயிற்றுக் கிழமை பகல் 11 மணியளவில் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

பழுகாமம், பட்டாரபுரத்தைச் சேர்ந்த 39 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஈஸ்வரன் தியாகராஜா என்பவரே உயிரிழந்துள்ளார்.

பொதுமக்களின் உதவியுடன் நீரில் மூழ்கி உயிரிழந்தவரையும், மோட்டார் சைக்கிளையும் மீட்ட பொலிஸார், உயி ரிழந்தவுடன் பயணித்த இரண்டு நண் பர்களையும் கைது செய்தனர்.

இது தொடர்பாக களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் மதுபோதையில் இருந்த பொலிஸ் அரச உத்தியோகத்தர் மீது வெறியாட்டம்!

CLICK HERE VIDEO

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், புங்குடுதீவு – மடத்து வெளி பிரதேசத்தில் அமைந்துள்ள கடற்படை சோதனைச்சாவடியில் நேற்று இரவு அதியுச்ச மதுபோதை யில் காணப்பட்ட ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய உத்தியோகத் தர் ஒருவர், அவ்வழியே பயணித்த அரச உத்தியோகத்தர் ஒருவர் மீது இலஞ்சம் கோரி தாக்குதல் நடத்தி யுள்ளார்.

இதனைத் தடுக்காமல் கடற்படை யினர் வேடிக்கை பார்த்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**மன்னார் சிந்துஜாவின்**

நேற்று இரவு அவர் தவறான முடி வெடுத்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மன்னாரில் சிந்துஜாவின் தாயாரிடம் உள்ள தனது பிள்ளையை அவர்கள் பார்க்க விடுவதில்லை என்று சிந்துஜாவின் கணவர் அண்மைக்காலமாகப் பலரிடம் தெரிவித்து வந்த நிலையில் அவர் மன விரக்தியில் காணப்பட்டார் என்று தெரிய வருகின்றது.

---

**மின்சாரம் தாக்கி...**

இடம்பெற்றுள்ளது.

கலென்பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த 15 வயதுடையவர் மாணவனே நேற்று இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி மாணவன் தனது வீட்டின் பின்புறம் உள்ள குளியல் அறையில் குளித்துக்கொண்டிருந்தபோது, தண்ணீர் எடுப்பதற்காக மின் மோட்டார் இயக்கப் பட்டுள்ளது.

மின் மோட்டாரில் பொருத்தப்பட்டிருந்த கம்பியில் அவரது ஆடைகள் வைக் கப்பட்டிருந்த நிலையில், அவர் குளித்து விட்டு ஆடைகளை எடுக்க முற்பட்டபோது மின்கம்பி அறுந்து உடலில் சுற்றியதில் மின்சாரம் தாக்கிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

---

**தமிழரசுக் கட்சி...**

“பலர் என்னிடம் வினவும் ஒரு வினா வாக இம்முறை ஜனாதிபதித் தேர்த லில் யாருக்கு ஆதரவளிக்கப் போகின் றீர்கள் என்று கேட்கின்றனர். நாங்கள் ரணில், சஜித், அநுர ஆகிய மூன்று பிர தான வேட்பாளர்களையும் சமதூரத்தில் வைத்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றோம். தீர்க்கமான முடிவின் பின் யாருக்கு ஆதரவளிப்போம் எனக் கூறுவோம். அதற்கான காரணங்களை யும் முன்வைப்போம். அதன் பின் நீங்க ளும் பூரண ஆதரவை வழங்கலாம்.

எமது தீர்மானத்தை மக்கள் மத்தி யில் தெளிவான காரணங்களுடன் அறிவிப்போம். எமது மக்களுடைய வாக்குகள் தேவை என்று.மூன்று பிரதான வேட்பாளர்களுக்கும் நன்கு தெரியும். இதனால் நாங்கள் பேரம் பேசும் சக்தியாக அழுத்தங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றோம் என்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு வுக்கு அறிவித்துள்ளேன்.

எம்மைப் பற்றிய நிலவரங்களைச் சிங்கள மக்களுக்கு அவர்களாகவே புரியக்கூடிய வகையில் அறிவிக்கக் கூடிய நிலை இருக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றேன். எமது கட்சி முடி வெடுக்கும் வரை பொறுமை காக்க வேண்டும் என மக்களாகிய உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

# தமிழர்களுக்குக் காலம் இட்ட கட்டளையே பொதுவேட்பாளர் என்கின்றார் ஐங்கரநேசன்



முள்ளிவாய்க்கால் யுத்தத்தின் முடிவு வரைக்கும் தமிழ்த் தேசிய உணர்வோடு தேசமாகத் திரண்டிருந்த தமிழ் மக்கள் யுத்தத்தின் பின்னர், சிதறடிக்கப்பட்டார்கள். அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலில் பிரதேசம், சாதியம், சமயமாகத் தமிழ்த் தேசியம் துண்டாடப்பட்டு வருகிறது. இவற்றால் அரசியல் ரீதியாகத் தமிழினம் மிகவும் பலவீனமாகத் பின்தள்ளப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டே தமிழ் மக்களைத் தேசமாக மீண்டும் திரளச் செய்து அரசியல் அபிலாசைகளை ஒரே குரலில் வெளிப்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதித் தேர்தலில் தமிழப் பொதுவேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார். இந்த முடிவு காலம் இட்ட கட்டளை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராகப் போட்டியிடும் பா. அரியநேத்திரனுக்கும் கூட்டுறவு அமைப்புகளின் பிரதானிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று சனிக்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன மண்டபத்தில் இடம்பெற்றது. இதற்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது என்பது தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு கோட்பாட்டு ரீதியான முடிவு. இதனைப் புரிந்து கொள்ள விரும்பாதவர்கள் வெல்ல முடியாத தேர்தலில் எதற்காகப் போட்டி என்று விதண்டாவாதம் புரிகிறார்கள். எண்ணிக்கையில் மிகப் பெரும்பான்மையாகச் சிங்கள மக்களைக் கொண்ட இலங்கைத் தீவில் தமிழன் ஒருபோதும் ஜனாதிபதியாக வர முடியாது என்பது எல்லோருக்கும் தெரியும். பொதுவேட்பாளர் ஜனாதிபதியாக வெற்றிபெற முடியாது. ஆனால் தமிழ் மக்களை மீளவும் தேசமாகத் திரளச் செய்வதில் அவர் வெற்றி பெறுவார்.

தென்னிலங்கை வேட்பாளர்களிடையே நான்கு முனைப் போட்டி நிகழும் நிலையில் பொதுவேட்பாளர் தங்களின் வெற்றி வாய்ப்பைப் பாதிக்கும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். இதனால் பொதுவேட்பாளரை நிறுத்தியுள்ள தரப்புகளுடன் பேச வருமாறு அழைப்புக்கு மேல் அழைப்பு விடுக்கிறார்கள். அதே சமயம் அவர்களுடன் நேரடியாகவும், பின்கதவாலும் தொடர்புகளைப் பேணிவருகின்ற தமிழ் அரசியல்வாதிகளின் மூலம் பொதுவேட்பாளருக்கு எதிரான மூர்க்கத்தனமான கருத்துகளும் பரப்பப்பட்டு வருகின்றன. பொதுவேட்பாளர் துரோகியாகக்கூடச் சித்திரிக்கப்படுகிறார்.

பொது வேட்பாளர் பற்றித் தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பார்த்த பின்பே முடிவெடுக்கலாம் என்றும் அவர்களுடன் பேரம் பேசலாம் என்றும் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் கூறிவருகின்றார்கள். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான குறைந்தபட்சத் தீர்வையேனும் ஆட்சி அதிகாரங்களில் இருந்த போதுகூடச் செய்ய விரும்பாத தென்னிலங்கைத் தலைமைகளுடன் தேர்தல் நேரத்தில் பேச முற்படுவது அவர்களின் வெற்றிவாய்ப்பை உறுதி செய்வதற்கான ஓர் உத்தியே ஆகும். பொதுவேட்பாளருக்கு எதிரான பரப்புரைகளின் பின்னால் உள்ள கபடத்தனங்களைத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். – என்றும் தெரிவித்துள்ளார்.

## வட மாகாண விளையாட்டு:

# 3 முதலிடங்களைப் பெற்று சாதித்த யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி






வட மாகாண மட்ட பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி மாணி 3 போட்டிகளில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த ஒரு வார காலமாக துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைப்பெற்று நேற்றுடன் முடிவடைந்தது.

இதில் வெள்ளியம்பலம் மகிந்தனின் புதல்வி மாதுரி 200m ஓட்ட போட்டியில் மாகாண ரீதியில் முதலாவது இடத்தையும் 400m ஓட்டப் போட்டியில் மாகாண சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்து முதலாவது இடத்தையம் பெற்றுள்ளார்.

அத்துடன் 100m போட்டியிலும் முதலாவது இடத்தைப் பெற்று யாழ்ப்பாணக் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். இவரின் பயிற்றுவிப்பாளராக ஜெகநாதலிங்கம் லக்ஷ்மன் செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடதக்கது.

# நமது கருத்து

## லீசிங் நெருக்கடி !

பொருளாதார நெருக்கடிகளினால் அதிகம் பாதிக்கப்பட்ட துறைகளில் ஒன்று தவணைக் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் வாடகைக் கொள்வனவு அல்லது குத்தகைக் கொள்வனவு என்று அழைக்கப்படும் ‘லீசிங்’ துறையாகும். குறிப்பாக லீசிங்குக்கு வாகனக் கொள்வனவு செய்யும் துறை தான் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

லீசிங் தவணையை சரியாக செலுத்தத் தவறிய இக்கட்டினால் இவ்வாண்டின் கடந்த 8 மாதக் காலப்பகுதியில் ஐயாயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் குத்தகைக் கொள்வனவாளர்களிடமிருந்து அந்தந்த நிறுவனங்களால் கையகப்படுத்தப்பட்டுள்ளன என லீசிங் மற்றும் கடன் வழங்குநர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்திலும் பத்தாயிரத்துக்கும் அதிகமான வாகனங்கள் இவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குத்தகைக் கொள்வனவு அடிப்படையில் - தவணைக் கட்டணத்தில் - வாகனங்களைப் பெறுபவர்கள் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக தவணைகளை சரியாக செலுத்த முடியாமல் அந்தரிக்கின்றார்கள். அவர்களிடமிருந்து அந்த வாகனங்களை வாடகைக் கொள்வனவுத் திட்டத்தில் வழங்கிய நிறுவனங்கள் மீளப் பிடுங்கிக்கொள்கின்றன.

நாட்டின் பொருளாதார பின்னடைவினால் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்வோருக்கு சில சலுகைகளை - சகாய காலத்தை பெற்றுத் தருமாறு, விசேட விலக்களிப்புக் காலங்களை வழங்குமாறு, கடந்த சில நாள்களாகவே அதிகாரிகளிடம் தாங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர் என சங்கத்தின் தலைவர் அசங்க ருவன் பொத்துபிட்டிய கூறியுள்ளார்.

நிதி நிறுவனங்களிடம் காணி மற்றும் செத்துக்களை அடமானம் வைத்தவர்களுக்காக, கடனை மீள செலுத்த டிசம்பர் மாதம் 15ஆம் திகதி வரை சலுகை வழங்க அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை மேற்கொண்டாலும், அவர்களை பொருளாதார ரீதியில் உறுதியாக்க எதுவித நடவடிக்கையும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை என அவர் விசனம் தெரிவித்திருக்கின்றார்.

பிணையாக ஆதனங்கள் மற்றும் சொத்துகளை வைத்துக் கொண்டு கடன் வழங்கும் வங்கிகள் மற்றும் நிறுவனங்கள், திருப்பிச் செலுத்தப்படாத கடன் நிலுவைக்காக, நீதித்துறை செயல்முறைகளுக்கு செல்லாமல், பிணையாக வைக்கப்பட்ட சொத்துக்களை விற்பதன் மூலம் கடன் நிலுவையை அறவிட்டு மீட்டெடுக்க வழி செய்யும் விதத்தில் நாட்டில் சட்டம் உள்ளது. அது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கம் கொண்ட வங்கிகள் மூலம் கடன்களை திரும்பப் பெறுதல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் என்று அழைக்கப்படுகின்றது. இதனை பராட்டே சட்டம் என்று கூறுவர்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை அடுத்து இந்தப் பராட்டேச் சட்டத்தின் நடைமுறையாக்கத்தை இவ்வாண்டு டிசம்பர் மாதம் 15ஆம் திகதி வரை இடைநிறுத்துவதற்கு வசதி செய்யும் விதத்தில் ‘கடன்களை வங்கிகள் மீளப் பெறுவது தொடர்பான (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டம்’ கடந்த மே மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் காக அவகாசம் இவ்வாண்டு டிசம்பர் 15 வரை என்பதனால் அந்தத் திகதியின் பின்னர் காணி மற்றும் சொத்துக்களை அடமானம் வைத்தவர்களின் சொத்துக்கள் கூட இழக்கப்படும் எனச் சுட்டப்படுகின்றது.

வாடகைக் கொள்வனவுத் திட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு மூன்று தவணைக் கொடுப்பனவுகளை வழங்க முடியாமல் போனால் வாகனத்தைப் பலாத்காரமாக கொண்டு செல்லும் காரணத்தினால் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தும் மக்களுக்கு சலுகைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என அசங்க ருவன் பொத்துபிட்டிய கூறியுள்ளார்.

அரசின் காதுகளில் வாடகைக் கொள்வனவாளர்களின் அவலக் குரல் கேட்குமா?


tamil one
SV MEDIA
SV MEDIA
MEGA BLAST
BIGGEST SUMMER EVENT
2024
CELEBRATING SOUTH ASIAN TASTE AND CULTURE
7 - 8 Sept 2024
Scarborough Fair Ground
Morningside & Finch
FREE ENTRY • FREE PARKING
FOR MORE INFO
647-993-9291 | 437-872-6257
416-436-1010

# மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் சடலம் அடையாளம் காணப்பட்டது

மஸ்கெலியா பொலிஸ் நிலையம் அருகில் சடலம் ஒன்றை மஸ்கெலியா பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காண பட்டது என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர். முகம் பார்க்க முடியாதபடி கழிவு நீர் செல்லும் வடிகாலில் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்லோ தோட்ட கங்கேவத்தை பிரிவில் வசிக்கும் சேவி மாரி (வயது 47) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

சம்பவம் நடந்த இடத்துக்கு ஹட்டன் வலய தடையவியல் பொலிஸார் வந்து பரிசோதனை மேற்கொண்டு ள்ளனர்.

சடலம் உள்ள பகுதிகளில் பாதுகாப்பு வேலி போடப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு ஹட்டன் நீதிமன்ற நீதிபதி வந்து பார்வையிட்ட பின்னர் சடலம் கிளங்கன் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லபட்டது.

சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் உடற் கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளது என்று மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.மேலதிக விசாரணைகள் மஸ்கெ லியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# இன, மத பேதங்களுக்கு அப்பால் சேவை செய்வதற்கு விரும்புகிறேன்

## அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளர் றிஸ்லி முஸ்தபா தெரிவிப்பு

(எம்.என்.எம்.அப்றாஸ்)

இன மத பேதங்களுக்கு அப்பால் நான் எனது தந்தை பாட்டனார் போல் பொது மக்களுக்குச் சேவை செய்ய விரும்புகிறேன் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும் மயோன் கல்வித் திட்ட, சமூக அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர்களின் மாபெரும் எழுச்சி மாநாடு "புதிய யுகம் நோக்கிய பயணம்" எனும் தொனிப் பொருளில் சாய்ந்தமருது பௌசி மைதானத்தில் நேற்று சனிக்கிழமை (24) இடம்பெற்றது.

இதன்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரை நிகழ்த்துகையில்,

எனது தந்தை மர்ஹூம் மாயோன் முஸ்தபாவின் திட்டங்களில் ஒன்றான அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் மாவட்ட இளையோருக்கான வேலை வாய்ப்பு, அம்பாறை மாவட்ட இளைஞர்களுக்கான நவீன வசதிகள் கொண்ட தொழிநுட்பக் கல்லூரி, நவீன வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானம் மேலும் பல இளையோருக்கான தேவைப்பாடுகள் மக்கள் நலன் சார் இதர சேவைகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

எதிர்வரும் ஜானாதிபதி தேர்தலில் சஜித்பிரேமதாஸ நிச்சயம் வெற்றி பெற்ற பின்னர் அதன் பிறகு அமையவுள்ள அரசால் முழு அதிகாரம் கொண்ட கேபினட் அமைச்சராக நிச்சயம் எமது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் றிசாத் பதியுதீன் நியமிக்கப்படுவார். அதன் மூலம் தலைவரின் உதவியுடன் மேலும் பல சேவைகளை மேற்கொள்வேன்.

அம்பாறை மாவட்டத்தில் என்னைப் பல கட்சிகள் அழைத்தன. ஆனால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை கட்டமைப்பு மாவட்ட கொள்கை சரியான பாதையை முன்னெடுக்கும் என்ற வகையில் நான் இந்த கட்சியில் இணைந்து பயணித்து சேவையாற்ற உள்ளேன்.– என்றார்.

இந்த இளைஞர் மாநாட்டில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியத் தலைவரும் கைத்தொழில் மற்றும் வர்த்தக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான றிசாத் பதியுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான அமீர் அலி கௌரவ அதிதியாகவும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் அம்பாறை மாவட்ட செயற்குழு தலைவருமான அப்துல் ரசாக் ஜவாத், கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் அஷ்ரப் தாஹீர்,கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான பணிப்பாளர் ஐ.எல்.எம். மாஹீர், கட்சியின் பிரதிச்செயலாளர் நாயகம் அன்சில் அல்–அமீரி, முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீம், முன்னாள் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபையிர் உட்பட கட்சியின் முக்கிய பிரமுகர்கள் இளைஞசர், யுவதிகள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகள்,பாராட்டு நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







# திருமலை குச்சவெளிப் பள்ளவக்குளம் காணிப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

திருகோணமலை, குச்சவெளி பள்ளவக்குளம் விவசாயக் காணிப் பிரச்சினை சம்மந்தமாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், அரச அதிபருடன் கலந்துரையாடியுள்ளார்.

திருகோணமலை, குச்சவெளி பள்ளவக்குளம் விவசாயக் காணிப் பிரச்சினை சம்மந்தமாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் மற்றும் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் அண்மையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இந்தக் காணிப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. இந்தச் சந்திப்பில் பலநோக்குக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜஹான், ஜாயா நகர் விவசாய சம்மேளனத் தலைவர் சமீம், உபதலைவர்நிபார், மற்றும்செயலாளர்இஸ்ஸதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# தஞ்சாவூர் விமூர்த்தானந்தா சுவாமிகள் விபுலானந்தாவில் ஊக்கச் சொற்பொழிவு

**(வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கை நிறுவகத்திற்கு விஜயம் செய்த தஞ்சாவூர் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி விமூர்த்தானந்த ஜீ மகராஜ் சுயமுன்னேற்றத்துக்கான ஊக்கச் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

முன்னதாக அங்குள்ள சுவாமி விபுலானந்த அடிகளாரின் திருவருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து வணங்கினார்.

பின்னர், இராசதுரை அரங்கில் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி ப்ளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் இந்த நிகழ்ச்சி இடம்பெற்றது.

அங்கு அனைவரும் பாராட்டத்தக்க வகையில் ஊக்கச் சொற்பொழிவை சுவாமிகள் நிகழ்த்தினார் .

அதன் போது சுவாமி மாத்ருசேவானந்த ஜீயும் கலந்து கொண்டர்.






# மன்னார் கடற்கரைப் பகுதியில் பிளாஸ்டிக் பொருள்கள் அகற்றல்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட இளைஞர்களால் பிளாஸ்டிக் பொருள்களை அகற்றும் சிரமதானப் பணிகள் நேற்று சனிக்கிழமை (24) மன்னார் கோந்தப்பிட்டி கடற்கரையை அண்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் செயற்பாட்டாளர் பிரியந்தா ஏற்பாட்டில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் பெனடிக் குரூஸ் தலைமையில் இந்தச் சிரமதானப் பணி இடம்பெற்றது. இதன்போது சேகரித்த பிளாஸ்டிக் பொருள்களை உரியவர்களிடம் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டது.











# கல்முனை ஸாஹிரா கல்லூரியின் சாதனையாளர்கள் கௌரவிப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் 2024 ஆம் ஆண்டு விளையாட்டு உட்பட இணைப்பாடவிதான செயற்பாடுகளில் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் பிரகாசித்து வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி கல்லூரி கல்வி சமூகத்தால் வெகு விமர்சயாக ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது,

சாதனை புரிந்த அனைத்து மாணவர்களும் கல்முனை – அக்கரைப்பற்று பிரதான வீதியில் இருந்து பான்ட் வாத்திய அணிவகுப்புடன் கல்லூரி வரை ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கல்லூரி வளாகத்தில் வைத்துக் கௌரவிக்கப்பட்டனர்.

கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அதிதிகளாக கல்முனை கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம்.முதர்ரிஸ், கல்லூரியின் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவின் செயலாளர் டாக்டர் எம்.எச்.கே.சனூஸ் காரியப்பர், கல்முனை கல்வி வலய உடற்கல்வி பாட வளவாளர் ஏ.எம்.அன்சார் மற்றும் கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலய அதிபர் எம்.ஏ.சலாம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.












# மட்டக்களப்பில் வலயத்தில் தொழுநோய் கருத்தரங்கு!

(பழுவூரான்)

மட்டக்களப்பிலுள்ள ஐந்து வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குத் தொழுநோய் தொடர்பான தெளிவூட்டல் நிகழ்வு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் காவேரி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் வெளளிக்கிழமை (23) இடம் பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.முரளீஸ்வரனின் வழிகாட்டுதலின் கீழ் பிராந்திய தோற்றுநோய் வைத்திய அதிகாரி திருமதி ஏ. கார்த்திகா தலைமையில் வைத்தியர் சதுர்முகம் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோய்த் தாக்கத்தின் தற்போதய நிலைமை தொடர்பாகவும் இந் நோயை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பாகவும் இதன்போது அதிகாரிகளுக்கு



தொழுநோய்க்கு பொறுப்பான வைத்திய அதிகாரி திலகசனால் அளிக்கை மேற்கொண்டு தெளிவூட்டப்பப்பட்டது.

நாடளாவிய ரீதியாக ஒப்பிடுகையில் மட்டக்களப்பு மாவட்டம் மூன்றாம் இடத்தில் உள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் இந்த நோய்த் தாக்கத்தில் சிறார்கள் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளமை தரவுகளின் அடிப்படையில் சுட்டிக்காட்டப்பப்பட்டது.

தொழுநோயைப் பூரணமாகக் குணப்படுத்துவதற்கான மருத்துவம் தற்போது காணப்படுகின்ற போதும் மக்கள் மத்தியில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வின்மைமே இந் நோய் பரவுவதற்கான பிரதான காரணமாக உள்ளது. இதன்போது தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் அனுபவப் பகிர்வுகள் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காவேரி கலாமன்றத்தினரால் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் மதத் தலைவர்கள், காவேரி கலாமன்றத்தின் இணைப்பாளர் அருட் தந்தை ஏ. எஸ். ரூபன், பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.சரவணபவன், பிராந்திய தொற்றாநோய் பொறுப்பதிகாரி இ.உதயகுமார், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், பிராந்திய மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் வி.வேணிதரன், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# மன்னார் பள்ளிமுனைக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாருக்கு நேற்று சனிக்கிழமை (24) விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பள்ளிமுனை பகுதிக்கும் விஜயம் செய்திருந்தார்.

இதன் போது பள்ளிமுனை கடற்கரை இறங்குதுறைக்குச் சென்று அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் கடற்கரை ஆழப்படுத்தும் பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடி யாகப் பார்வையிட்டார்.

கடல் வற்று நேரங்களில் தமது இறங்குதுறை பகுதியில் படகுகளை உட் கொண்டு வருவதில் ஏற்படும் சிரமங் களை போக்க சுமார் 700 மீற்றர் தூரத்தை ஆழப்படுத்தித் தூர்வாரி தருமாறு மன்னார் பள்ளிமுனை கடற்றொழிலாளர் சங்கத்தால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தது.

இதனை அடுத்து அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட உடன் நடவடிக்கை யின் பிரகாரம் சுமார் 40 மில்லியன் ரூபா செலவில் தூர்வாரும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



இந்தப் பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் நிலைமைகளை அவதானித் ததுடன் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் ஆழப்படுத்தும் பணிகளை நிறைவு செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்தார்.

இந்த நிலையில் கிராமிய கடற்றொழில் கூட்டுறவு சங்கத்தால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சேவைகளை பாராட்டி கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

# சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்க நாம் தீர்மானம் எடுத்துள்ளோம்

## தேசிய ஐக்கிய நல்லிணக்க முன்னணித் தலைவர் சுகத் பிரசாந்த




(ஹஸ்பர்)

ஜனாதிபதி தேர்தலில் நாங்கள் சஜித் பிரேமதாஸவுக்கு எல்லோரும் வாக்களிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்துள்ளோம் என்று தேசிய ஐக்கிய நல்லிணக்க முன்னணி கட்சியின் தலைவர் ஏ. எல். சுகத் பிரசாந்த தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று (24) மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

கடந்த கால அரசில் ரணில் விக்கிரமசிங்க இந்த ஆட்சியினுடைய தலைவராக இருந்தார். அவரை நாங்கள் பார்த்தோம். இந்தத் திருகோணமலைக்கு என்ன நடந்தது. நாட்டைப் பற்றி யோசிக்க முன்னர் எங்களுடைய திருகோண மலையை பற்றி யோசிக்க வேண்டும். இந்த நாட்டின் முக்கியமான ஒரு இடம்தான் திருகோணாமலை. பொருளாதாரம் ஏனைய விடயங்களுக்கும் முக்கியமாக இருக்கிறது.

ஜனாதிபதியால் அனுப்பப்பட்ட ஆளுநர் அவருடைய நோக்கங்களைச் செய்வதற்காக அனுப்பி உள்ளார். அவர் நினைக்கிற மாதிரி இந்தத் திருகோணமலையில் உள்ள காணிகள், வளங்கள் அனைத்தையும் வெளிநாடுக்குப் பெரிய பெரிய கம்பெனிகளுக்கு விற்பனை செய்கிறார்கள். இது எங்கள் கண்முன்னால் நடக்கிறது இதை யாரும் கேட்பார் இல்லை.

நாங்கள் மாத்திரம்தான் இதனை எடுத்துச் சொன்னோம் . இதனைக் காப்பாற்றினோம். மக்களுக்காக வேண்டி நாங்கள் செய்தோம். இந்த நாட்டில் உள்ள அரசியல்வாதி கட்சிகள் எதுவும் செய்யவில்லை. சிங்களக் கட்சி, முஸ்லிம் கட்சி, தமிழ் கட்சி யாரும் பேசவில்லை. அநுகுமார திசாநாயக்காவும் இவை பற்றி பேசவில்லை. ஆனால் சஜித் பிரேமதாஸ மட்டும் கதைத்துள்ளார்.

மக்களிடம் இருந்துதான் காசு வாங்கி இந்த அரசு நாட்டை நடத்திக் கொண்டிருக்கின்றது. இந்த முறை நீங்கள் சஜித் பிரேமதாஸவை நாட்டின் தலைவராக உருவாக்குவதற்கு ஜனாதிபதித் தேர்தலில் வாக்குகளை அளியுங்கள்.– என்றார்.



# மருதமுனை பிரதேச வைத்தியசாலைக்கு மருத்துவ, தளபாடங்கள் கையளிப்பு

(எஸ்.எம்.எம்.றம்ஸான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள சுகாதார நிறுவனங்களின் அத்தியாவசியத் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் மருத்துவ உபகரணங்கள், தளபாடங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் மருதமுனை பிரதேச வைத்தியசாலைக்கு மருத்துவ தளபாடங்கள் கையளிக்கும் நிகழ்வு வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.எம்.மிஹ்லார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு தளபாடங்களைக் கையளித்தார்.

இதன்போது பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர், வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# கர்நாடக மாநில முதல்வர் பதவியில் இருந்து சித்தராமையாவை நீக்குவது குறித்து ஆலோசனை



கர்நாடக முதல்வர் சித்தராமையா மீது நில மோசடி வழக்குப்பதிவு செய்யப்பட்டிருப்பதால், அவருக்கு பதிலாக வேறு ஒருவரை முதல்வராக நியமிக்கலாமா என காங்கிரஸ் மேலிடம் ஆலோசனை நடத்தியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கர்நாடக முதல்வர் சித்தராமையாவின் மனைவி பார்வதிக்கு சொந்தமான நிலத்தை கடந்த சில ஆண்டுகளுக்கு முன் மைசூரு மேம்பாட்டு கழகம் கையகப்படுத்தியது. இதற்கு மாற்றாக அவருக்கு 14 வீட்டு மனைகள் ஒதுக்கப்பட்டன. அவரிடம் கையகப்படுத்திய நிலத்தின் மதிப்பைவிட, மாற்றாக வழங்கப்பட்ட நிலத்தின் மதிப்பு பன்மடங்கு அதிகமாக இருந்ததால் முறைகேடு நடந்ததாக புகார் எழுந்தது.

இதையடுத்து சமூக ஆர்வலர்களும் பா.ஜ.கவினரும் சித்தராமையா மீது நில மோசடி வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என ஆளுநர் தாவர்சந்த் கெலாட்டிடம் புகார் அளித்தார். அதன் பேரில் சித்தராமையா மீது வழக்குப் பதிவு செய்து விசாரிக்க ஆளுநர் அனுமதியளித்தார். இதனை எதிர்த்து சித்தராமையா தாக்கல் செய்த வழக்கை விசாரித்த கர்நாடக உயர் நீதிமன்றம் அவர் மீது நடவடிக்கை எடுக்க இடைக்கால தடை விதித்துள்ளது.

இதனிடையே பா.ஜ.க, ம.ஜ.த. ஆகிய எதிர்க்கட்சியினர், முதல்வ ர்பதவியை இராஜினாமா செய்யக்கோரி சித்தராமையாவுக்கு எதிராக தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதே போல துணை முதல்வர் டி.கே.சிவகுமாரின் ஆதரவு எம்எல்ஏக்கள் சிலர், சித்தராமையாவை மாற்ற வேண்டும் என போர்க்கொடி உயர்த்தியுள்ளதால் காங்கிரஸ் அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜ"ன கார்கே நேற்று முன்தினம் மாலை முதல்வர் சித்தராமையாவையும், துணை முதல்வர் டி.கே.சிவகுமாரையும் டில்லிக்கு வரவழைத்து இருவரிடமும் ஆலோசனை நடத்தினார். அப்போது மக்களவை எதிர்க்கட்சிதலைவர் ராகுல் காங்கிரஸ் பொதுச்செயலாளர் வேணுகோபால் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

அப்போது காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் சித்தராமையாவிடம் மனைவிக்கு நிலம் ஒதுக்கிய வழக்கு குறித்து விசாரித்தனர். இந்த வழக்கை எவ்வாறு எதிர்கொள்வது? எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளை எவ்வாறு சமாளிப்பது? இந்த வழக்கால் கர்நாடக அரசுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளதா என சரமாரியாக கேள்வி எழுப்பியதாக கூறப்படுகிறது.

இதுதவிர காங்கிரஸ் மேலிடத் தலைவர்கள் கர்நாடக முதல்வராக உள்ள சித்தராமையாவை மாற்றிவிடலாமா அல்லது அவரையே தொடர அனுமதிக்கலாமா என தனியாக ஆலோசித்ததாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த கூட்டத்துக்கு பின்னர் டி.கே. சிவகுமார் செய்தியாளர்களிடம் கூறும்போது,

"கர்நாடக அரசியல் நிலவரம் குறித்து மேலிடத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினோம். காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் அனைவரும் சித்தராமையாவுக்கு ஆதரவாக இருக்கிறோம். இப்போதைக்கு அவர் முதல்வர் பதவியை இராஜினாமா செய்யும் பேச்சுக்கே இடமில்லை. பா.ஜ.கவினர் திட்டமிட்டு புகார்களை கூறி வருகின்றனர். இதையெல்லாம் சட்டப்படி எதிர்கொள்வோம்" –என்றார்.

# விஜய் உடனான சந்திப்பு கூட்டணிக்காக இல்லை: தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விளக்கம்



மறைந்த தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தின் 72 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, 71 டாட்டு கலைஞர்களால் 71 பேருக்கு 71 நிமிடங்களில் விஜயகாந்தின் முகம் கையில் டாட்டுவாக வரையும் சாதனை நிகழ்ச்சி சென்னை கோயம்பேட்டில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வு கலாம் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற உள்ளது. இந் நிகழ்வை கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பார்வையிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

த.வெ.க. தலைவர் விஜய்யுடனான சந்திப்பு கூட்டணிக்கானது அல்ல. நட்புணர்வோடு நடைபெற்ற ஒன்று. விஜய் எங்களுக்கு புதியவர் கிடையாது. தனது கட்சியின் கொடி அறிமுகத்துக்கு முன்பாக எங்களது வீட்டுக்கு வந்து, மறைந்த தலைவர் விஜயகாந்தின் படத்துக்கு மரியாதை செலுத்தி, ஆசீர்வாதம் வாங்கி சென்றார். அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

விஜய் புத்திசாலியான, அமைதியான பையன். நிச்சயமாக பிரச்சினைகளை எல்லாம் சமாளிப்பார். அதேபோல விஜய் திரை உலகில் நிறைய சவால்களை சந்தித்து இருக்கிறார். ஆனால் அரசியலை சினிமா போன்று எடுத்துக் கொள்ள முடியாது. அவர் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் யோசித்து தான் எடுத்து வைக்க வேண்டும். இது ஒரு குடும்ப சந்திப்பு போன்றுதான் எங்களுக்கு அமைந்தது."– என்றார்.

# ஹிஸ்புல்லா, இஸ்ரேல் பரஸ்பரம் பாரிய தாக்குதல் மத்திய கிழக்கில் இன்று அதிகாலை கடும் பதற்றம்







கடந்த மாதம் பெய்ரூட்டில் உயர்மட்ட தளபதி புவாட் ஷுக்ர் கொல்லப்பட்டதற்கு பழி தீர்க்கும் முகமாக இன்று ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேலை நோக்கி 320 இற்கும் மேற்பட்ட ரொக்கெட்டுகளை ஏவி தாக்குதல் நடத்தியதாக ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், நூற்றுக்கணக்கான கத்யுஷா ரொக்கெட்டுகளால் வடக்கு இஸ்ரேலில் உள்ள 11 இராணுவ தளங்களை குறிவைத்ததாகக் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு எதிரான தனது தாக்குதலின் முதல் கட்டம்' முடிந்துவிட்டதாக அந்த அமைப்பு கூறியது. இது இஸ்ரேலிய முகாம்கள் மற்றும் தளங்களை குறிவைக்கும் கட்டம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹிஸ்புல்லா அமைப்பின் தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் லெபனானிலுள்ள அந்த அமைப்பின் இலக்குகள் மீது விமான தாக்குதலை நடத்தியுள்ளது.

ஹிஸ்புல்லாவின் தளங்கள் அமைந்துள்ள பகுதிகளிலிருந்து லெபனான் குடிமக்கள் உடனடியாக வெளியேற வேண்டுமென எச்சரிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல்களை அடுத்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது பாதுகாப்பு அமைச்சரவையின் அவசர கூட்டத்தை கூட்டுவதாக அறிவித்தார்.

நெதன்யாகுவின் அலுவலகம், பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலன்ட் ஆகியோர் டெல் அவிவில் உள்ள இராணுவ தளத்தில் இருந்து நிலைமையை நிர்வகித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலை அடுத்து இஸ்ரேல் 48 மணிநேரம் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியுள்ளது.

அத்துடன், தாக்குதலை அடுத்து நிறுத்தப்பட்ட இஸ்ரேல் சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அனைத்து தூதரக கடவுச்சீட்டுகளும் ரத்து



பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அனைத்து தூதரக கடவுச்சீட்டையும் அந்நாட்டு இடைக்கால அரசு ரத்துச் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்ட வன்முறையில் 400 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். அந்த நாட்டு பிரதமர் பதவியிலிருந்து விலகிய ஷேக் ஹசீனா, நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார்.

இந்த நிலையில், பங்களாதேசில் முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு, ஷேக் ஹசீனாவின் அனைத்து நாடுகளின் கடவுச்சீட்டுகளையும் ரத்து செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி முன்னாள் நாடளுமன்ற உறுப்பினர்கள் அனைவரது கடவுச்சீட்டுளும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், இந்தியாவில் இருக்கும் பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா வேறு நாட்டிற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சீனாவில் ஒரு வாரமாக கடும் மழை; 11 பேர் பலி, 14 பேரை காணவில்லை

சீனாவின் லியோனிங் மாகாணத்தில் உள்ள /ஹலுடாங் நகரில் கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் கனமழையில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 14 பேர் காணாமல் போயுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும், கனமழையால் 100 கோடிக்கும் அதிகமான சொத்து சேதம் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், கானாமல் போயுள்ளவர்களை தேடும் பணியில் மீட்புக் குழு ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தஇரண்டுமாதங்களில்சீனாவில் நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தால் 150 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.





கனடா முரசு
பக்கங்கள் - 5
ஞாயிற்றுக்கிழமை 25/08/2024

## வடமேற்கு ஒன்றாரியோவில் வார இறுதியில் கடும் மழை!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 25

கிழக்கு ப்ரேரிஸ் மற்றும் வடமேற்கு ஒன்றாரியோவில் வார இறுதியில் கடுமையான இடியுடன் கூடிய மழை தொடரும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

C2 ▶



# ரயில் ஊழியர்களை வேலைக்குத் திரும்ப தொழிலாளர் சபை நேற்றுத் தீர்ப்பளித்தது

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 25

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான ரயில்வே ஊழியர்களை வேலைக்குத் திரும்புமாறு மத்திய தொழிலாளர் சபை நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இது சம்பந்தப்பட்ட தரப்புகளைக் கட்டுப்படுத்தும் நியாயாதிக்கம் கொண்ட உத்தரவாகும்.

திங்கள்கிழமை காலை முதல் சரக்கு ரயில்கள் மீண்டும் ஓடத் தொடங்க வேண்டும் எனவும் தொழிலாளர் சபை குறிப்பிட்டுள்ளது.

கனேடிய தேசிய ரயில்வே மற்றும் கனேடிய பசிபிக் கன்சாஸ் சிட்டி ஆகிய நிறுவனங்கள் முன்னெப் போதும் இல்லாத வகையில் இரட் டைப் பணி நிறுத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, நாடு முழுவதும் சரக்குக் கப்பல்கள் நிறுத்தப்பட்டு, பயணங்கள் முடங்கியுள்ளன.

ஆனால் இரு நிறுவனங்களிலும் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் டீம்ஸ்டர்ஸ் யூனியன் நீதி மன்றத்தில் தீர்ப்பை மேல்முறையீடு செய்யப்போவதாக தெரிவித்துள்ளது.



# இருபாலினத்தவர் ஒருவரை நாடு கடத்தும் முடிவு நிறுத்தம்

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 25

கனடாவில் இருந்து கென்யாவுக்கு நாடு கடத்தப்படும் தருவாயில் உள்ள இருபாலினத்தவர் ஒருவரின் ஆதரவாளர்கள், வெளியேற்றத்திற்கு ஒரு நாள் முன்னதாகவே இந்த நடவடிக்கையை மத்திய அரசு நிறுத்திவிட்டதாகக் கூறுகின்றனர்.

ரொறன்ரோவில் வசிக்கும் 48 வயதான நபருக்கு ஒரு வருட தற்காலிக குடியுரிமை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சார்லஸ் முவாங்கியை ஆதரிக்கும் ஓர் அமைப்பான மாற்றத்திற்கான புலம்பெயர்ந்த தொழிலாளர் கூட்டணி கூறுகிறது.

2019 இல் கனடாவுக்கு வருவதற்கு முன்பு கென்யாவில் மரண அச்சுறுத்தல்கள் மற்றும் துஷ்பிரயோகம் காரணமாக தப்பி ஓடி வந்தார் எனும் கூறும் முவாங்கி, அவர் கட்டாயமாகத் திரும்புவார் என்று பயந்தார்.

கென்யா சமபாலின உறவுகளை குற்றமாக்குகிறமை குறிப்பிடத் தக்கது.






# பொலிஸ் அதிகாரியை இடித்துத் தள்ளி விட்டு தப்பியோடிய மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்!

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 25

நேற்று மாலை ரோஜர்ஸ் சென்டருக்கு அருகில் மோட்டார் சைக்கிளை மறித்த ஒரு பொலிஸ் அதிகாரியை இடித்துத் தாக்கிப் பலத்த காயம் அடையச் செய்து விட்டு ஓடித் தப்பிய மோட்டார் சைக்கிள் ஓட்டுநரை ரொறன்டோ பொலிஸார் தேடி வருகின்றனர். நேற்று மாலை 6 மணியளவில் பிரீம்னர் பொலிவார்ட் மற்றும் ரீஸ் ஸ்ட்ரீட் இடத்தில் இந்த விபத்து இடம்பெற்றது.

முறையற்ற விதத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியமையைத் தொடர்ந்து, அதிகாரி மோட்டார் சைக்கிளை நிறுத்த முயன்றார்.

அதன்போது அவர் தாக்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதையடுத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர் அங்கிருந்து தப்பியோடினார் எனவும், மோட்டார் சைக்கிள் கடைசியாக எந்தத் திசையில் சென்றது என்பது தெரியவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கனடாவில் வார இறுதியில் உக்ரேனிய சுதந்திர தினம்

மனிடோபா, ஓகஸ்ட் 25

இந்த வார இறுதியில் வின்னிபெக்கில் ஒன்று கூடி சுதந்திர தினத்தை கொண்டாடிய உக்ரேனிய வம்சாவளியைச் சேர்ந்த மனிடோபன்கள், ரஷ்யாவுடனான போர் தொடர்ந்து இழுபறியாக இருப்பதால் ஒற்றுமையைக் காட்ட இந்த திகதி ஒரு வாய்ப்பாக உள்ளது என்று கூறுகின்றனர். சோவியத் யூனியனில் இருந்து உக்ரைன் சுதந்திரம் பெற்ற 33வது ஆண்டு விழா நேற்று கொண்டாடப்பட்டது.




பெப்ரவரி 24, 2022 அன்று ரஷ்யா தனது முழு அளவிலான படையெடுப்பைத் தொடங்கியதிலிருந்து இது மூன்றாவது முறையாகும்.

அப்போதிருந்து, போரிலிருந்து தப்பி ஓடிய பல்லாயிரக்கணக்கான உக்ரேனியர்களை மனிடோபா வரவேற்றுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வின்னிபெக்கிற்கு வந்த நஷாரி செய்ச்சகெவ்க், உக்ரேனிய துருப்புக்களுக்கு ஆதரவாக தி ஃபோர்க்ஸில் நிதி திரட்டும் நிகழ்வை நேற்று ஏற்பாடு செய்திருந்தார்.

## வடமேற்கு...



கடுமையான புயல்களுக்கான ஆபத்து சஸ்காட்சுவானின் பகுதிகளை சனிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை ஒரே இரவில் கடக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று பகலில் மனிடோபா மற்றும் வடமேற்கு ஒன்டாரியோவில் கடுமையான வானிலைக்கு மிகவும் வலுவான அச்சுறுத்தல் உருவாகும் எனவும், இது சூறாவளி அபாயத்தைக் கொண்டு வரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




# ‘ரோயல் பாங் ஒவ் கனடா’ அதிகாரி திடீர் பதவி நீக்கத்தினால் சர்ச்சை!

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 25

உலகம் முழுவதிலும் 2 கோடி வாடிக்கையாளர்களைக் கொண்ட கனடாவின் மிகப்பெரிய சர்வதேச வங்கியான ரோயல் பாங் ஒவ் கனடா தொடர்பில் சர்ச்சை ஒன்று எழுந்துள்ளது.

ரோயல் பாங் ஒவ் கனடா வங்கியின் தலைமை நிதி அதிகாரியாக இருந்து வந்த நேடைன் அன் கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி அதிரடியாகப் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

வங்கியின் ஊழியர் ஒருவருடன் நேடைன் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பே அவரது பணிநீக்கத்துக்குக் காரணம் என்று கூறப்பட்டது பெரும் விவாதத்தைக் கிளப்பியது.

இந்நிலையில் நேடைன் தொடர்பிலிருந்த மேசன் என்ற அந்த ஊழியரையும் பணிநீக்கம் செய்துள்ளதாக வங்கி நிர்வாகம் அறிக்கை வெளியிட்டது. இதுதொடர்பாக ஒகஸ்ட் 23ஆம் திகதி நீதிமன்றத்திலும் ரோயல் பாங் ஒவ் கனடா வங்கி வழக்குத் தொடர்ந்துள்ளது.

தனது அறிக்கையில் ரோயல் பாங் ஒவ் கனடா கூறியிருப்பதாவது:-

வங்கியின் விதிகளை மீறி தலைமை நிதி அதிகாரியாக இருந்த நேடைன் ஆன் தனக்குக் கீழ் வேலை செய்துவந்த மேசனுடன் தனிப்பட்ட முறையில் நெருக்கமாக உறவு வைத்துள்ளார்.

ப்ராஜெக்ட் கென் என்ற திட்டத்தில் நேடைன் ஆன் மேற்பார்வையில் பணியாற்றிவந்த மேசனுக்கு தங்களின் உறவு காரணமாகத் தனிப்பட்ட முறையில் பரிந்துரைத்து வங்கியில் பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வு உட்படச் சிறப்புச் சலுகைகளை வாங்கிக் கொடுத்துள்ளமையும் தெரிய வந்ததுள்ளது - என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தையும் மறுத்துள்ள நேடைன் ஆன், தங்கள் இருவருக்கும் இடையில் எந்தவிதமான காதல் உறவும் இல்லை என்றும் தாங்கள் வெறும் நண்பர்கள் மட்டும்தான் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் வங்கி மக்கள் மத்தியில் தனது பெயருக்கு வெளிப்படையாகக் களங்கம் ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட இருவரும் வங்கியிடம் நஷ்டஈடு கேட்டு நீதிமன்றத்தை நாடியுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

# தள்ளுபடி விலையில் மளிகைக்கடைகள் கனடாவில் பிரபல நிறுவனம் திறக்கிறது

பிரபல நிறுவனம் ஒன்று, கனடாவில் தள்ளுபடி விலையில் மளிகைக்கடைகள் பலவற்றைத் திறக்க முடிவு செய்துள்ளது.

விலைவாசியால் உணவுப்பொருள்கள் வாங்க கஷ்டப்படும் கனேடியர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியாக இது அமையும் என்பதில் சந்தேகம்இல்லை.

கனடாவின் பிரபல சில்லறை வர்த்தக நிறுவனமான Loblaw, கனடாவின் பல பகுதிகளில் தள்ளுபடி விலையில் மளிகைக்கடைகள் பல வற்றை திறக்க முடிவு செய்துள்ளது.

No Name stores என அழைக்கப்படும் இந்த கடைகளில் முதல் மூன்று கடைகள், அடுத்த மாதம், அதாவது, செப்டம்பர் மாதம், Windsor, St. Catharines மற்றும் Brockville ஆகிய இடங்களில் திறக்கப்பட உள்ளன.




இந்த மளிகைக்கடைகளில், 1,300 வகையான பொருள்கள் கிடைக்கும்.

இந்தக் கடைகள், காலை 10.00 மணி முதல், மாலை 7.00 மணி வரைதான் இயங்கும்.



# றொறன்ரோவில் முதியவர்களை ஏமாற்றிய யுவதியைத் தேடி பொலிஸார் வலை வீச்சு

கனடாவின் றொறன்ரோவில் முதியவர்களை ஏமாற்றி மோசடிகளில் ஈடுபட்ட பெண் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

பேரப்பிள்ளைகளுக்கு ஆபத்து எனக்கூறி இந்த பெண் முதியவர்களிடம் மோசடி செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீதிமன்றில் வங்கி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும் என கூறி முதியவர்களிடம் வங்கி அட்டை விவரங்களை பெற்றுக்கொண்டு பணத்தை மோசடி செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்த சந்தேக நபரின் படம் ஒன்றையும் பொலிஸார் வெளியிட்டுள்ளனர். இவர் சுமார் 30 வயது மதிக்கத்தக்கவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பெண் தொடர்பிலான ஏதேனும் தகவல்கள் இருந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இவர் மேலும் பலரை ஏமாற்றி இருக்கக்கூடும் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான மோசடிகள் தொடர்பில் முதியவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் பிணை வழங்குவதற்கு இவ்வாறு வங்கியில் இருந்து வேறொரு நபரிடம் பணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கனடாவில் முதியவர்களை ஏமாற்றி பணம் பறிக்கும் சம்பவங்கள் அடிக்கடி பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு தடுப்பூசிகள் ஏற்றுமாறு பெற்றோருக்கு அறிவுறுத்தல்!



கனடாவில் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் வழங்கப்பட்டுள்ளது.

விடுமுறை காலம் முடிந்து பிள்ளைகள் பாடசாலைக்கு திரும்ப உள்ள நிலையில் நோய்த் தொற்றுகள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தட்டம்மை, இருமல் போன்ற நோய்களுக்கு தடுப்பூசி ஏற்றிக் கொள்வது பொருத்தமானது என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளினால் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய நோய்களிலிருந்து தங்களது பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்ள பெற்றோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

கனடாவிலும், உலகம் முழுவதிலும் தற்பொழுது தட்டம்மை போன்ற நோய்கள் பதிவாகி வரும் நிலையில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பிள்ளைகளுக்கு தடுப்பூசி ஏற்றுவது முக்கியமானது என கனடிய பொதுசுகாதார அதிகாரி டாக்டர் திரேசா டேம் தெரிவித்துள்ளார்.

உங்களது பிள்ளைகள் அனைத்து விதமான தடுப்பூசிகளையும் ஏற்றிக் கொண்டுள்ளனர் என்பதனை நீங்கள் உறுதி செய்து கொள்ளுங்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

நியூ பிரவுன்ஸ்விக் போன்ற பகுதிகளில் அதிக அளவில் சிறுவர்கள் இருமல் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர் தெரிவிக்கப்படுகிறது.

# போதை மருந்துப் பாவனையால் ஏற்படும் மரணங்கள் ஒன்றாரியோவில் கூடலாம்!



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் அதிக அளவு மரணங்கள் பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

போதை மருந்து பயன்படுத்தும் பாதுகாப்பு நிலையங்கள் மூடப்படுவதன் மூலம் இவ்வாறு மரணங்கள் பதிவாகும் என நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

போதை மருந்து பயன்படுத்துவோருக்கு உதவும் வகையில் கண்காணிக்கப்பட்ட பாதுகாப்பு நிலையங்களில் போதை மருந்து பயன் படுத்த வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு மையங்கள் மூடப்படுவதன் மூலம் மித மிஞ்சிய அளவில் போதை மருந்து உட்கொள்ளும் சாத்தியத்தினால் மரணங்கள் வெகுவாக அதிகரிக்கலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தில் தற்போது காணப்படும் போதை மருந்து பயன்படுத்தப்படுவதற்கான கண்காணிப்பு நிலையங்களை மூடுவதற்கு மாகாண அரசாங்கம் யோசனை முன் வைத்துள்ளது.

இந்த யோசனை கனடாவில் போதை மருந்து பயன்படுத்துவோரின் மரண எண்ணிக்கையை அதிகரிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பள்ளிக்கூடங்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றிற்கு அருகாமையில் அமைந்துள்ள நிலையங்களை மூட வேண்டும் என அரசாங்கம் யோசனை முன்வைத்துள்ளது.

எனினும் இந்த யோசனையின் காரணமாக மரணங்கள் அதிக அளவில் பதிவாகும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# ஆளும் லிபரல் கட்சியின் அமைச்சரவைச் சந்திப்பு

## ஹாலிபெக்ஸில் இன்று முதல் மூன்று நாள்கள்

ஒன்ராறியோ, ஓகஸ்ட் 25

ஆளும் லிபரல் கட்சியின் கோடைக்காலத்திற்குப் பின்னரான அமைச்சரவைச் சந்திப்பு இன்று ஹாலிபெக்ஸில் ஆரம்பிக்கின்றது.

மூன்று நாள்கள் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் கனடாவின் உள் நாட்டு விவகாரங்கள் உள்ளடங்கலாக, கனடா - அமெரிக்கா உறவுகளும் குறித்தும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

வட்டி வீதங்கள் மற்றும் பணவீக்கம் என்பன குறைந்து வருகின்ற நிலையில், வீட்டு வாடகை மற்றும் வாழ்க்கைச் செலவும் என்பன அதிகரித்து வருகின்ற சூழலில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மைய இடைத்தேர்தல்களில் லிபரல் கட்சி தோல்வியைச் சந்தித்தமை கட்சிக்குள் தலைமைத்துவ மாற்றத்திற்கான கோரிக்கையை அதிரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.